பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை 28.10.2022 கதிர் 355

### இனி இது ரகசியம் அல்ல!

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்து கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஆற்றினார் எனக் கூறப்படும் உரை தொடர்பாக விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கும்படி நீதி ☞2

# விழித்துக் கொள்ளாவிடில் வீழ்ந்து விடுவோம் வீணாக!

## தமிழ் இனத்தை எச்சரிக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



கொழும்பு,ஒக்டோபர்28

தமிழ் மக்கள் இந்த ஆண்டுடன் விழித்துக் கொள்ளவில்லையென்றால், தமிழ்த் தேசியம் முழுமையாக பறிபோகும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். ☞2

## கடிதங்களைத் தீக்கிரையாக்கிய காணாமல்போனோரின் உறவுகள்





(வவுனியா நிருபர்)

அரசின் காணாமல்போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்தால் அனுப்பப்பட்ட கடிதங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று தீக்கிரையாக்கப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா, ஏ - 9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ☞2

## எந்தத் தேர்தலுக்கும் தயார்; மஹிந்தர் நேற்று அறிவிப்பு!

### ஆரச்சிகட்டுவவில் நேற்று அவர் சூளுரை

புத்தளம்,ஒக்.28

தேர்தலை கண்டு அஞ்ச வேண்டிய தேவை எமக்கு இல்லை. எந்தத் தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூன்றாவது கட்சி கூட்டம் 'சாம்பலில் இருந்து எழுவோம்!' என்ற தொனிப்பொருளின் கீழ், முன்னாள் பிரதமர் ☞2

## சிறுவன் மீது வாள்வெட்டு; 'ஆவா' விநோதன் கைது!

17 வயதுடையவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஆவா என அழைக்கப்படும் வினோதன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்றுக்கு சென்று திரும்பிய வேளை அவர் கைதானார்.

தீபாவளி தினமான கடந்த திங்கட்கிழமை இணுவில் வீதியில் சென்ற 17 வயதுடைய ஒருவரை வழிமறித்த நால்வர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பித்தனர். ☞2

## வவுனியாவில் போதைப்பொருள்களுக்கு முடிவுகட்டக் களமிறங்கியது எஸ்.ரி.எவ்.

### விசேட தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப் படையினர் களமிறங்கியுள்ளனர். அத்துடன் வவுனியாவுக்குரிய விசேட தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்காலத்தில் வடக்கு மாகாணங்களில் போதைப்பொருள் பாவனை, குற்றச்செயல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அந்தவகையில், வவுனியா மாவட்டத்தில் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் ☞2

## போதையில் பரலோகத்துக்கு ஒன்றாகப் போன தம்பதியர்!

வயது முதிர்ந்த கணவனும், மனைவியும் மதுவுக்கு அடிமையான நிலையில், மது போதையில் மயங்கி விழுந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின் மரணமாகியுள்ள சம்பவமொன்று பதுளை வைக்கும்பர பெருந்தோட்டத்தில், ☞6

## பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தின் முன் போராட்டம்

கொழும்பு நாரஹேன்பிட்டியில் அமைதிருக்கும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக் கட்டடத்துக்கு முன்பாக நேற்று மதியம் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைகழக மாணவ ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே, சிறிதம்ம தேரார் உள்ளிட அனைவரையும் விடுதலை செய்ய வலிறுத்தியே இந்த போராட்டம் ☞6










## 'அறகலய - 2' இற்கு முன்னாயத்தமாக எதிரணி நேற்றுக் கொழும்பில் பேரணி

அரசாங்கத்திற்கு எதிரான 'அறகலய' எதிர்ப்புப் பிரச்சாரத்தின் இரண்டாம் கட்ட போராட்டத்தை முன்னெடுக்கும் ஆயத்த நடவடிக்கையாக தொழிற்சங்கங்கள் நேற்று கொழும்பில் பேரணியில் ஈடுபட்டன.

ஐம்பத்க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புக்கள் கொழும்பில் உள்ள ஹைட் பார்க் மூலையில் தங்களது ☞6

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபாநாயகரை எழுத்துமூலம் கோரி இருக்கும் விடயம் 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கொடுத்த ஆண்டி'யின் வேலையாகி விடும் என்றே தோன்றுகின்றது.

இது தொடர்பான கோரிக்கைக் கடிதம் நேற்றுத் தான் சபாநாயகருக்குக் கிடைத்தது. எனினும் அதற்குப் பின்னர் நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்தக் கடிதம் கிடைத்தமை குறித்தோ அல்லது அது பற்றிய விடயங்கள் குறித்தோ சபாநாயகர் அக்கூட்டத்தில் வாயே திறக்கவில்லை. பிறகு பார்க்கலாம் என்று வைத்து விட்டார் போலும்.

சபாநாயகர் இப்படி இந்தக் கோரிக்கை தொடர்பானவிடயத்தைமுடிவெடுக்காமல் தள்ளிப் போட்டமையில் காரண, காரியங்கள் இல்லாமல் இல்லை.

ஒரே சட்ட வாசகத்துக்கு, இரண்டு உயர் நீதிமன்ற ஆயங்கள் ஒன்றுக்கொன்று மாறான வியாக்கியானங்களைத் தந்திருக்கின்றமையையே சுமந்திரன் தமது நாடாளுமன்ற உரையில் பிய்த்து உதறி இருந்தார்.

சுமந்திரனின் அந்த உரையை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்தால், அந்த விசாரணையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் சொல்லுக்குச் சொல்லு பிரித்து, பிளந்து ஆராயப்படும் நிலைமை வரும். அது உயர் நீதிமன்றத்துக்கு இன்னும் இழுக்கை ஏற்படுத்திவிடும். தப்பித் தவறி அவ்விடயத்தை - தீர்ப்புகளை - ஒட்டி தெரிவுக் குழு ஒரு கருத்தியல் முடிவை எடுத்தால், அது, 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை'ஆகியும் விடலாம்.

தெரிவுக்குழு அமைத்து விசாரித்தால் சுமந்திரன் தனது தரப்பு நியாயத்துக்கு, உயர் நீதிமன்றத் தீர்ப்புகளை மாறி மாறி வசனத்துக்கு வசனம் ஒப்பிட்டு, அவிழ்த்துக் கொட்டி, மேலும் சேதாரத்தை ஏற்படுத்தும் நிலைமை நேர்ந்து விடலாம் என்று சபாநாயகர் யோசிக்கின்றார் போலும். அதில் நியாயம் இருக்கவே செய்கின்றது.

எனினும் இந்த விடயம் குறித்து இப்போது ஊடகங்கள் கேட்கும் கேள்விகளுக்கு 'நோ கமெண்ட்ஸ்' என்று கூறி, புத்திசாலித்தனமாக நாடாளுமன்றத்துக்கு வெளியில் விளக்கமோ கருத்தோ கூறாமல் தவிர்த்து வருகின்றார் சுமந்திரன்.

உயர்நீதிமன்றத் தீர்ப்பை நாடாளுமன்றுக்குள் விமர்சிப்பதற்கு சிறப்புரிமை தமக்கு உள்ளது என்பதை உணர்ந்து கொண்டுள்ளமையால்தான், அதற்கு வெளியில் வீணாக வாயைக் கொடுத்து தம்மை புண்ணாக்கிக் கொள்ளாமல் தவிர்த்து வருகின்றார் அவர்.

அதேசமயம்நீதியமைச்சர்விஜயதாஸ் ராஜபக்ஷ தரப்பு தமக்கு எதிராகக் கிளப்பி வரும் புறணிகளுக்குத் தகுந்த இடத்தில் சமய சந்தர்ப்பம் பார்த்து கனகச்சிதமாக கொடுக்க சுமந்திரன் தயாராகி வருகின்றார் என்றும் தெரிகின்றது.

சுமந்திரனின் நாடாளுமன்ற உரை குறித்து விசாரணை செய்ய தெரிவுக்குழு நியமிக்கும்படி கோரும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் கடிதம் நேற்று தான் சபாநாயகருக்கு கிடைத்திருக்கின்றது. நேற்றுத் தான் அது தமக்குக் கிடைத்தது என்பதை சபாநாயகரே நேற்று சுமந்திரனுக்கு நேரில் உறுதிப்படத் தெரிவித்தும் இருக்கின்றார். ஆனால் நேற்றுக் காலை சபாநாயகருக்கு அந்தக் கடிதம் கிடைக்க முன்னரே, அத்தகைய கடிதத்தின் முழு விவரம் நேற்றைய கொழும்புப் பத்திரிகைகளில் அப்படியே விலாவாரியாக இடம் பெற்றிருக்கின்றது.

கடிதம் சபாநாயகருக்கு கிடைக்க முன்னரே தம்மைக் குறை கூறும் கடிதம் ஊடகங்களுக்குக் கசிய விடப்பட்டிருப்பதன் மூலம் தமது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் விடயம் முன்னெடுக்கப்பட்டு இருப்பதாக குறிப்பிட்டு, அதையொட்டி சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை நாடாளுமன்றத்தில் கிளப்ப சுமந்திரன் தயாராகி வருகிறார் என்றும் தெரிகின்றது.

இப்படி சிறப்புரிமைப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் கிளப்பி, அங்கு வைத்தே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்குத் தகுந்த கசையடி வழங்க சுமந்திரன் வியூகம் வகுக்கின்றார் என்றும் கருதப்படுகின்றது. அதன் தாக்கம் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு மட்டுமல்ல, உயர் நீதிமன்றத்திற்கும் நெற்றியடி தருவதாக அமையக்கூடும்.

நீதி அமைச்சரின் கோரிக்கை படி தெரிவுக்குழு அமைக்க சபாநாயகர் தீர்மானிப்பாராயின், அரசின் ஊத்தைகளைப் பகிரங்க மேடையில் விவாதிக்க - துவைக்க - வாய்ப்புக் கிட்டும். அவ்வளவுதான்.

- மின்னல் -

## கடிதங்களைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு அரசின் காணாமல்போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்தால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான மேலதிக விவரங்கள் கோரி கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உறவுகள் குறித்த அலுவலகத்தைத் தாம் நிராகரிப்பதாகவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச தலையீட்டின் மூலமே காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கிடைக்கும் எனத் தெரிவித்தும் குறித்த கடிதங்களைக் கிழித்து அதனைத் தீக்கிரையாக்கினர்.

இன்னும் காலம் தாழ்த்தாது கையில் ஒப்படைத்த எமது பிள்ளைகளே எமக்கு வேண்டும் என்று கடிதங்களைத் தீக்கிரையாக்கிய தாய்மார் தெரிவித்தனர்.

## எந்தத் தேர்தலுக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று புத்தளம் ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனம், மதம் என நாட்டு மக்கள் வேறுபட்டு நின்று செயற்பட்டால் தற்போதைய பொருளாதார நெருக்கடி தீவிரமடையுமே தவிர குறைவடையாது. இதன் காரணமாகவே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 'மீண்டும் ஒன்றிணைந்து எழுவோம்!' என்ற தொனிப்பொருளின் கீழ், புத்தளம் மாவட்டத்தில் கட்சி மாநாட்டை நடத்துவதற்குத் தீர்மானித்தது.

பொருளாதார பாதிப்பு சகல தரப்பினருக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது. கொரோனா பெருந்தொற்று தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டது. நாட்டு மக்களின் சுகாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கினோம் என்பதை உறுதியுடன் குறிப்பிட முடியும். - என்றும் தெரிவித்துள்ளார்.

## சிறுவன் மீது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாள்வெட்டுக்கு உள்ளானவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார்.

அவர்களில் ஆவா என அழைக்கப்படும் வினோதனும் வந்திருந்தார் என்று வாள்வெட்டுக்குள்ளானவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

அதனடிப்படையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஆவா வினோதன் நேற்றுப் பிற்பகல் நீதிமன்றிலிருந்து வெளியேறிய நிலையில் கைது செய்யப்பட்டார். வாள் ஒன்றும் அவரிடம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

## வவுனியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரவே விசேட அதிரப்படையினர் களமிறங்கியுள்ளனர்.

வவுனியாவில் பரவி வரும் போதைப் பொருள் வியாபாரம், போதைப்பொருள் பாவனை, குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான நடவடிக்கையை அதிரடியாகக் கட்டுப்படுத்தவே விசேட அதிரடிப் படையினர் களமிறங்கியுள்ளனர்.

அத்துடன் அறிவித்தல் வழங்க பின்வரும் விசேட தொலைபேசி இலக்கங்களும் 0718592378, 0112580518 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## விழித்துக் கொள்ளாவிடில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். புதிய அரசமைப்பு உருவாக்குவது தொடர்பாகவும்,அதன் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு தருவார் எனவும், அதற்கு ஒரு வருட காலம் தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தாம் வரவேற்கின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

அன்று ரணில் பிரதமராக இருந்த காலத்தில்,அரசமைப்புச் சபை உருவாக்கப்பட்டு, திருத்தம் ஒன்று முன்வைக்கப்பட்டது. அதை நாம் நன்றாக படித்து, இந்த புதிய அரசமைப்பு ஒற்றை ஆட்சியைத் தான் பிரதிபலிக்கிறது, அதை நிராகரிக்க வேண்டும் என்று கூறியிருந்தோம்.நாம் நிராகரித்த ஒன்றைத்தான், இப்போது வேண்டும் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அன்றே இந்த 'ஏக்கிய இராஜ்ஜிய' பிரச்சினை வந்தது. 'ஒற்றை ஆட்சி' என்ற சொல் தமிழிலே நீக்கப்பட்டு, 'யூனிடேரி ஸ்டேட்' என்ற சொல் ஆங்கிலத்தில் நீக்கப்பட்டு, சிங்களத்தில் 'ஏக்கிய இராஜ்ஜிய' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டு குழப்பத்தில் முடிந்தது.

நாம் போராடி ஒரு லட்சம் உயிர்களை இழந்தது இந்த ஒற்றை ஆட்சி வேண்டாம் என்று தான். அதனை ஒருமித்த நாடு என்ற பக்கத்தில் கொண்டு வருவதற்கு சுமந்திரன் நினைக்கிறார். மக்களை மீண்டும் அடிமையாக மாற்றுவதற்கும், தேர்தல் காலத்தில் மக்களை பயன்படுவதற்கும் தமிழ் தரப்புகள் முயற்சி செய்து வருகின்றன. தமிழ் மக்களைத் தவறாக வழி நடத்தி, ஏமாற்ற வேண்டும் என்பது இவர்களின் எண்ணம்.

ஆகவே தான் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வந்ததிலிருந்து, பல விடயங்களை நாம் மக்களுக்கு வலியுறுத்தி வருகின்றோம். அதில் ஒன்று தான் இப்போது சீனா, இந்திய உள்ளிட்ட நாடுகளின் கைப்பிடியில் இருப்பது. இதை நாம் அன்று கூறும் போது யாரும் நம்பவில்லை. இப்போது எல்லாமே அவர்களின் ஆளுகையின் கீழ்தான் இங்கே நடைபெறுகிறது.

இது தவிர இன்னுமொரு தரப்பு இப்போது வேறு ஒரு வேலை செய்கிறது. எமக்காகத் தியாகம் செய்த போராளிகளின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை. விடுதலை போராட்டத்தின் அடிப்படையை மாற்றி அமைக்க நினைக்கிறார்கள். ஒரு சிலர் போராளிகளின் பெயரைப் பயன்படுத்தி இப்படி பலவற்றை மாற்ற நினைக்கிறார்கள் .ஆனால் நாம் எமக்காக போராடியவர்களுக்கு,பொருளாதார ரீதியில் ஏதும் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றோம்.

ராஜபக்ஷ அரசை வெளியேற்ற மும்மரமாக இருந்த ,வெளிநாட்டு தரப்பு இனி ரணிலுக்கு நெருக்கடி கொடுக்கப்போவதில்லை. ரணிலை வைத்து தமது காரியங்களை நகர்த்தப்போகிறார்கள். அப்படியான நிலையில் அவரைக் காப்பாற்றுவதற்கு தமிழ்த் தேசியம் பலியிடப்படும். ஆகவே அவர்களை நம்பி எந்தப் பயனும் இல்லை.

இரண்டுவருடத்துக்கு முதல், மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கி ஆட்சியை வழங்கிய சிங்கள மக்களே, அவர்களை அடித்து துரத்தியுள்ளனர். ஆனால் இப்படியான செயல்பாட்டைத் தான் தமிழ் தரப்புகள் செய்து கொண்டு இருக்கின்றன. இதற்கு தமிழ் மக்கள்தான் பலியாவார்கள். ஆகவே இந்த வருத்தத்துடன் தமிழ் மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும். - என்றார்.




Search Facebook
V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

📞 0768226244
📞 0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இரட்டைப் பிரஜாவுரிமைச் சர்ச்சை

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒரு புதிய சர்ச்சை குறித்து அதிகம் பேசப்படுகின்றது. அது இரட்டைப் பிரஜாவுரிமையை வைத்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய விவகாரம்தான்.

இரட்டைப் பிரஜாவுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என்ற ஏற்பாடு மீண்டும் 22 ஆவது திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்டமையை அடுத்தே இந்தச் சர்ச்சை.

இந்தச் சட்டம் உடனடியாக நடைமுறைக்கு வருகின்றமையால் பதவி விலகப் போகின்ற எம்.பிக்கள் யார், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட உறுப்பினர்கள் எவரெவர் என்பன தொடர்பாகப் புதிதாகத் தேடுதல்கள், ஆராய்வுகள் நடக்கின்றன.

இது அர்த்தமற்ற விடயம். இந்த நாடாளுமன்றத்திற்கான தேர்தல் 2020இல் நடைபெற்ற போது இந்தச் சட்டமே – இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற ஏற்பாடே – 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் நடைமுறையில் இருந்தது. அந்தச் சட்டத்தின் கீழ் தேர்தலில் நின்று தெரிவு செய்யப்பட்டோரே இப்போது நாடாளுமன்றத்தில் உள்ளனர்.

இந்த நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அதில் தெரிவான எம்.பிக்களே இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கலாம் என்பதற்கு இடமளிக்கும் இருபதாவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார்கள். அவர்களே இப்போது அந்த ஏற்பாட்டுக்கு மாறான – தலைகீழான – 22 ஆவது திருத்தத்தையும் நிறைவேற்றி இருக்கின்றார்கள் என்பது வேறு விடயம்.

அந்த இருபதாவது திருத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் பஸில் ராஜபக்ஷ போன்ற ஓரிருவர் தேசிய பட்டியல் மூலமோ, மாவட்ட ரீதியிலோ புதிதாக எம்.பியாகினர். அவர்களில் யாருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளதா என்று தேடிப் பார்ப்பதில் அர்த்தமுண்டு.

ஏனைய 99 வீதமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் எம்.பியாக முடியாது என்ற சட்டம் நடைமுறையில் இருக்கும் போது, அதன் கீழ் தெரிவானவர்கள்.

ஆகவே இப்போது அவர்கள் யாருக்காவது இரட்டைப் பிரஜாவுரிமை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அது புதிய விடயம் அல்ல. 2020 பொதுத் தேர்தலின் போதே அவர்கள் அந்த விடயத்தை மறைத்து, இந்தத் தேர்தலில் போட்டியிட்டார்கள் என்பதுதான் அர்த்தம்.

இவ்விடயத்தை ஒட்டி பல எம்.பிக்கள் தொடர்பில் சந்தேகக் கணைகள் எழுகின்றன. அவர், இவர் என்று பலரின் பெயர்கள் அடிபடுகின்றன.

ஆனால் அவற்றைப் பரிசீலித்து, உறுதி செய்யும் கட்டமைப்பு ரீதியான ஒழுங்கு முறையோ, ஏற்பாடோ இந்த நாட்டிலோ அரசிலோ இல்லை.

உண்மையாக இரட்டைப் பிரஜாவுரிமை வைத்திருக்கக் கூடிய எம்.பிக்களைக் கூட அடையாளம் கண்டு அம்பலப்படுத்தக்கூடிய ஒரு பொறிமுறை நமது அரசுக் கட்டமைப்பில் இல்லை என்பது நம் துரதிஷ்டமே.

# இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் இருதரப்பு விமானப் போக்குவரத்து ஒப்பந்தம்


## அமைச்சரவை அனுமதி

இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் இருதரப்பு சிவில் விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே நேரடி பயணிகள் மற்றும் சரக்கு விமானங்களை எளிதாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட உறுப்பினர்கள் உடன் பதவிவிலகுக!

## தம்மானந்த தேரர் வலியுறுத்து



இரட்டைக் குடியுரிமையை வைத்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட முடியாது என மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார் என அஸ்கிரிய பீடத்தின் லேகாதிகாரி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம், அரசியல் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்தக் கூடிய உயர் பதவிகளை இரட்டை பிரஜைகள் வகிக்க இடமளிக்கக் கூடாது எனவும் கூறியுள்ளார்.

இரட்டைக் குடியுரிமை வைத்திருப்பவர்கள் இலங்கைப் பிரஜைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தீர்மானங்களை எடுக்க அனுமதிப்பது பிரச்சினைக்குரியது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையின் கடன் வழங்குனர்கள் நாட்டுக்கு ஆதரவு வழங்க விருப்பம்!

## மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு



இலங்கையின் கடன் வழங்குநர்கள் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாட்டுக்கு தமது ஆதரவை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பான பேச்சின்போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை – பொருளாதார நிலை என்ற தலைப்பில் கொள்கை ஆய்வுகள் நிறுவகத்தால் தொகுக்கப்பட்ட அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துதல் மற்றும் உற்பத்தி இழப்புகளை மீளப் பெறுதல் ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்கும் நடவடிக்கைகள் தற்போதே ஒன்றாகச் செயற்படுத்தப்பட்டால் மட்டுமே தீர்க்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் ஏற்றத் தாழ்வுகளைச் சரிசெய்வதற்கும் இலங்கையில் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கலாநிதி நந்தலால் வீரசிங்க சுட்டிக்காட்டினார்.

# யாழில். திருடச் சென்ற வீட்டில் மது அருந்தி உறங்கிய இருவர்!

## ஒருவர் மடக்கி பிடிப்பு; மற்றையவர் தப்பியோட்டம்!

வீடொன்றில் திருட சென்ற திருடர்கள் இருவர் அந்த வீட்டில் சமைத்து சாப்பிட்டு, அங்கிருந்த மதுபானத்தை அருந்தி, படுத்து உறங்கிய நிலையில் ஒருவர் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார். மற்றையவர் தப்பியோடியுள்ளார்.

யாழ்ப்பாணம் மூளாய் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் வசிப்பவர்கள், கடந்த செவ்வாய்க்கிழமை வெளியே சென்று இருந்த சமயம், இரவு நேரம் வீட்டினுள் திருடும் நோக்குடன் இருவர் உள்நுழைந்துள்ளனர்.

வீட்டினுள் திருட சென்றவர்கள், வீட்டில் மதுபான போத்தல்களைக் கண்டு, வீட்டில் சமைத்து, மது அருந்தியுள்ளனர்.

மது அருந்தியவர்கள், நிறை போதையில் திருட சென்ற வீட்டிலேயே ஆழ்ந்த உறக்கம் கொண்டுள்ளனர்.

காலையில் வீட்டார் வந்து பார்த்த போது, வீட்டினுள் இருவர் மது அருந்திய நிலையில் உறக்கத்தில் இருப்பதைக் கண்ணுற்று, சத்தம் போட்டு அயலவர்களை அழைத்துள்ளனர்.

சத்தம் கேட்டு எழுந்த திருடர்கள் இருவரும் வீட்டில் இருந்து தப்பியோடியுள்ளனர். தப்பி ஓடியவர்களை அயலவர்கள் துரத்தி சென்ற போது ஒருவர் மாத்திரமே அகப்பட்டுக்கொண்டார். மற்றையவர் தப்பி சென்றுள்ளார்.

மடக்கி பிடிக்கப்பட்டவரை வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைகளின் போது மேற்படி நபர் சுன்னாகம் பகுதியை சேர்ந்தவர் எனவும், அவருடன் கூட வந்தவர் மூளாய் பகுதியை சேர்ந்தவர் எனவும், அவருக்கு ஏற்கனவே நீதிமன்ற பிடியாணை உள்ளதாகவும் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கந்தசஷ்டி சிறப்பு



**வேலேந்தி நிற்கின்ற வேலவனே போற்றி**
**விண்ணவர்கள் துயர்தீர்த்த வேலவனே போற்றி**
**மாலயனும் காணவொணா சிவன்மைந்தா போற்றி**
**மனவழுக்கைப் போக்கிடுவாய் வடிவழாகா போற்றி**

**தேனான திருநாமம் கொண்டவனே போற்றி**
**திருக்கையில் வேலேந்தி நிற்பவனே போற்றி**
**வள்ளை தேவயானையுடன் அமர்ந்தவனே போற்றி**
**மனமமர்ந்து நிற்கின்ற மால்மருகா போற்றி**

**ஈராறு கரமுடைய எழிலழகா போற்றி**
**ஈனமுடை எண்ணமதை எரித்திடுவாய் போற்றி**
**பாரமுடை பாவமூட்டை அழித்திடுவாய் போற்றி**
**பரம்பொருளாம் சிவன்மைந்தா முருகையா போற்றி**

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# யாழ் பல்கலை சைவ சித்தாந்த துறையால் மெய்கண்டார் குருபூஜை தினம் முன்னெடுப்பு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சைவ சித்தாந்தத்துறை உயர்பட்டபடிப்புக்கள் பீடமும் சைவசித்தாந்த முதுமாணி கற்கை அணி மாணவர்களும் இணைந்து புதன்கிழமை மாலை கைலாசபதி கலையரங்கில் மெய்கண்டார் குரு பூஜை தினத்தை முன்னெடுத்திருந்தனர்.

யாழ் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்த துறை தலைவர் பொன்னுத்துரை சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீஸ்ரீலஸ்ரீஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், முன்னாள் கலைப் பீடாதிபதியும் தகைசார் பேராசிரியருமான ப.கோபால கிருஷ்ண ஐயர், இலங்கை சர்வதேச இந்துகுருமார் ஒன்றிய தலைவரும் சைவ சித்தாந்த பண்டிதருமான ஜெகதீஸ்வரகுருக்கள் ஆகியோரால் ஆசியுரை இடம்பெற்றது.

தொடர்ச்சியாக பல்கலைக்கழக மாணவர்களால் மெய்கண்டாரின் வரலாற்றை புலப்படுத்துமுகமான வில்லிசை, நாடகம், பட்டிமன்றம் ஆகிய கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் நல்லை ஆதின குரு முதல்வர், முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை, யாழ் பல்கலைக்கழக பதிவாளர், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீக பீடாதிபதி சுகந்தினி சிறிமுரளிதரன், முன்னாள் கலைபீடாதிபதி கோபாலகிருஷ்ண ஐயர், இலங்கை சர்வதேச இந்து குருமார் ஒன்றிய தலைவர் ஜெகதீஸ்வரகுருக்கள், சைவ சித்தாந்தத்துறை தலைவர் பொ. சந்திரசேகரம், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 128 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை திலினி பிரியமாலி மோசடி!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலிக்கு எதிராக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின்படி 128 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை அவர் மோசடிசெய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா இதனைத் தெரிவித்தார்.

அவருக்கு எதிராக கிடைக்கப்பெற்ற 12 முறைப்பாடுகள் தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# போதைப்பொருளைக் கட்டுப்படுத்த வவுனியாவில் விடே நடவடிக்கை!

வவுனியாவில் போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த விடே அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளதோடு வவுனியாவிற்குரிய விடே தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்காலத்தில் வடக்கு மாகாணங்களில் போதைப்பொருள் பாவனை, குற்றச்செயல்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவே விடே அதிரப்படையினர் களமிறங்கியுள்ளனர்.

வவுனியாவில் பரவிவரும் போதைப்பொருள் வியாபாரம், போதைப்பொருள் பாவனை, குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான நடவடிக்கையை அதிரடியாக கட்டுப்படுத்தவே விசேட அதிரடிப்படையினர் களமிறங்கியதோடு அறிவித்தல் வழங்க பின்வரும் விசேட தொலைபேசி இலக்கங்களும் 071 8592378, 0112580518 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



# இந்தியப் பல்கலைக்கழக பட்டதாரிகளையும் அரச நியமனங்களில் உள்வாங்க தீர்மானம்!

அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகங்களில் பயின்ற பட்டதாரிகளையும் பட்டதாரி நியமனங்களில் உள்வாங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று (வியாழக்கிழமை) பிரதமர் தினேஸ் குணவர்த்தன மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்த காலப் பகுதியில், இந்தியப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்று பட்டதாரிகளானவர்கள், யுத்தம் நிறைவடைந்த பின்னர் தங்களின் சொந்த இடங்களுக் குத் திரும்பியுள்ளனர்.

அவ்வாறானவர்கள் அண்மைக்காலங்களில் இடம் பெற்ற அரச சேவைக்கான பட்டதாரிகள் ஆட்சேர்ப்புகளின் போது, வெளிநாட்டு பட்டதாரிகள் என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்பதற்கு பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

## 'அறகலய - 2' இற்கு முன்னாயத்தமாக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் கூட்டுப் பேரணியை நடத்தின. எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஒடுக்கியும், வரிகளை உயர்த்தியும் வரும் அரசுக்கு எதிராகத் தங்கள் பிரச்சாரத்தைத் தொடர் உறுதியளித்த அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிக்கவும்




கோரினர்.

4,000 க்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த கூட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் நகர மண்டபத்திலிருந்து இருந்து ஹைட் பார்க் மைதானத்திற்கு பேரணியாகச் சென்றனர்.

மின்சாரம், நீர், பெற்றோல், துறைமுகம், மீன்பிடி, விவசாயம், பெருந்தோட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க தலைவர்கள் உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் வரிகளால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு எதிராக தங்கள் பலத்தை வெளிப்படுத்தியதற்கான அறிகுறி இது என கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிரான தமது எதிர்ப்பைக்காட்ட 'அறகலய' பிரச்சாரத்தைப் போன்று தற்போது மக்கள் ஒன்று திரண்டுள்ளனர் என்ச்வும், இது அரசாங்கத்திற்கு எதிரான வலுவான பிரச்சாரமாக அமையும் எனவும் அவர் கூறினார்.

## போதையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் 26 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்விருவருக்கும் மகளும், மகனும் உள்ளனர். திருமணம் முடித்து குடும்பத்தைவிட்டு பிரித்து மகன் வாழ்கின்றார். மத்திய கிழக்கு நாடொன்றில் மகள் தொழில் செய்து வருகின்றார். இவர் பெற்றோருக்கு அனுப்பும் பணத்தில் இவ்விருவரும் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர்.

இவ்விருவரும் கூடுதலாக மது அருந்தியமையால் மயக்கமுற்று கீழே விழுந்துள்ளனர். அயலவர்கள் இவர்களை படல்கும்புரை அரசினர் மருத்துவமனையில் சேர்த்தனர். இவ்விருவரையும் பரிசோதனை செய்த டாக்டர்கள், இவர்கள் இறந்து விட்டனர் எனத் தெரிவித்தனர்.

## பயங்கரவாதப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது தேரருக்கு டெங்கு அறிகுறி தென்படுவதாகவும் முறையான சிகிச்சை இல்லை என்றும் சிறிதம்ப தேரரின் சகோதரி தெரிவித்தார்.

பயங்கரவாதா தடை சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறிதம்ப தேரருக்கு உடல் நிலை மோசமடைந்து வரும் நிலையில் பிணை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது.

'சரியான உணவு மருத்துவ வசதி இல்லை. இது தொடர்ந்தால் அவரின் உயிருக்கு யார் பொறுப்பு? அப்படி எதாவது ஒன்று நடக்குமானால் முழு பொறுப்பும் ரணிலுக்குத்தான். அதற்கு முன்னர் அவரை விடுதலை செய்ய வேண்டும். இல்லை என்றால் பாரிய பின் விளைவுகளை ரணில் அரசு சந்திக்க நேரிடும்.' - எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.












கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## கப்பல்கள் வருகின்றன



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 163



இரண்டாவது 'சூனிய போர் வலயம்' முல்லைத்தீவின் கிழக்குப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டு மக்கள் அந்த சிறிய வலயத்துக்குள் முண்டியடித்து குழுமினாலும் இரு தரப்புகளுமே தொடர்ந்தும் எறிகணைப் பரிமாற்றங்கள் நடத்திக் கொண்டிருந்தன. அவை ஆரம்பத்தில் பெரிய அளவிலோ மூக்கமாகவோ நடைபெறவில்லை.

விடுதலைப் புலிகளின் கவனம், அரசாங்கம் இடையிடையே வெளியிட்ட போர் நிறுத்த அறிவிப்புகளாலும், பொதுமக்களை வெளியேறத் தூண்டிய செய்திகளாலும், வெளியேற்றங்கள் நடைபெறாது மக்கள் அவர்களது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கான நடவடிக்கைகள் மீதுதான் இருந்தது.

இந்த யுத்த மேகம் கப்பிய தூறல் மழை போன்ற எறிணை தாக்குதல்கள் ஏப்ரல் 2009 வரை நடந்து கொண்டிருக்கும் பேச்சு வார்த்தைகளால் தொடர்ந்தது.

இந்தக் காலங்களில் விடுதலைப் புலிகள் தங்களது புலம்பெயர் அமைப்பாளர்களிலேயே தான் நம்பிக்கை கொண்டு, அவர்கள் எப்படியோ வழிகளைத் தேடுவார்கள் எனவும் எண்ணி இருந்தார்கள்.

இவற்றின் உந்துதல்களோ என்னவோ, விடுதலை புலிகள் 24 பெப்ரவரி



2009 போர் நிறுத்தம் ஒன்றைக் கோரி ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான், நோர்வே நாடுகளுக்குத் தகவல் அனுப்பினார்கள். குறிப்பாக இந்தக் கோரிக்கைக் கடிதம் இந்தியத் தரப்புக்கு அனுப்பப்படவில்லை.

அதனை கண்ணுற்ற மஹிந்தவும், கோட்டாவும், இராணுவத் தளபதிகளும் விடுதலைப் புலிகள் இப்பொழுது மன்றாடுகிறார்கள் என்ற இளக்காரம் கொண்டனர். அந்தப் பாணியிலேயே அந்த நாடுகளின் தொடர்பாளர்களுக்குப் பதில் தரப்பட்டது.

மஹிந்த விடுதலைப் புலிகள் கோரிய போர் நிறுத்தத்தை ஏற்க விரும்பாத போது, இந்த நாடுகள் கூட்டாக விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களைக் கையளித்து, ஒழுங்கான முறையில் போரை முடிவுக்குக் கொண்டு வரப் பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும், அவையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அதனைத் தொடர்ந்து பொதுமக்களின் பாதுகாப்புக்காகவும் அவர்களின் வெளியேற்றத்திற்காகவும் நோர்வேயும் அமெரிக்காவும் அன்னியோன்யமான சந்திப்புகளை மேற்கொண்டு சில திட்டங்கள் வகுக்கப்பட்டன. அந்த ஏற்பாடுகளில், ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கும் அவர்களது மேல்தட்டு தலைவர்கள் உட்பட யாவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவது, விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களை ஐ.நாவிடம் கையளித்து அவர்கள் ஐ.நாவிடம் அல்லது செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடன் சரணடைவது, சமாதானத்துக்கான இணை நாடுகளின் தலைவர்கள் பொதுமக்களின் வெளியேற்றத்துக்கும் பாதுகாப்புக்கும் தொடர்ந்து காரியமாற்றி நிரந்தர அரசியல் தீர்வையும் அடையப் பாடுபடுவது என்பன அடங்கின.

இந்தத் திட்டங்களின் ஓர் அங்கமாக அமெரிக்கா கடற்பிரதேசத்தில் இருந்து வசதியாக வெளியேறக் கூடிய கப்பல்களை தருவதற்கு இணங்கி, வெளியேற்றப்படும் விடுதலைப் புலிகள் போராளிகளையும் தலைவர்களையும் திருகோணமலைக்குக் கொண்டு சென்று இறக்குவதற்கு ஒத்துக் கொண்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர்களும் போராளிகளும் அப்படியாக வெளியேற்றப்பட்டு விட்டால் அரசாங்க தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு, அவர்கள் வெளியேற வசதிகள் செய்யலாம் எனவும், அந்த சரணடையும் நேரங்களில் ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியுடன் அமெரிக்கா, இந்தியாவின் முகவர்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் நடைமுறையாக்கங்களை மேற்பார்வை செய்ய இந்த வலயங்களில் பிரசன்னமாய் இருக்க வேண்டும் என வும் பரிந்துரைக்கப்பட்டது. சில தயக்கங்களுடன் இந்தத் திட்டங்களுக்கு ஆதரவுகள் ஸ்ரீலங்கா அரசால் தெரிவிக்கப்பட்டாலும், ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி இந்த ஒழுங்குகளில் பங்கு பற்றுவதை ஸ்ரீலங்கா உள்ளூற விரும்பவில்லை. அவர்களது இராணுவத்தினர் அதனை முற்றுமுழுதாக எதிர்த்தனர். கப்பல்களால் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டாலும் வெளியேற்றப்படுபவர்கள் உடனடியாகக் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு சர்வதேசத்தின் பாதுகாப்பில் வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் அவற்றுக்கு விடுதலைப் புலிகள் இணங்கி வருவார்கள் என்று எதிர்பார்ப்பு அனுசரணையாளர்களுக்கு இருந்தது.

ஸ்ரீலங்கா இராணுவம் இவற்றிற்குச் சம்மதம் பெற காலங்கள் எடுத்தமையும், இடையே இந்தியா மிக முக்கியமான தலைவர்களான பிரபாகரன், பொட்டு அம்மன், சூசை போன்ற ஆறு தலைவர்களுக்கு பொது மன்னிப்புத் தந்து, உள்ளூரில் உலாவதற்கு இடம் பெற ஸ்ரீலங்கா இணக்கம் தெரிவிக்க கூடாது என்ற கட்டுப்பாட்டையும் வெளிப்படுத்தியதால் சமரசங்களில் இந்திய தரப்புகளுடன் காலம் சென்றது.

### போராட்ட வடிவங்கள் மாறலாம்

இவற்றை நடைமுறைப்படுத்த புலம்பெயலாளர்களுடன் நடந்த பேச்சு வார்த்தைகளின் மேல் நோர்வே அனுசரணையாளர்கள் விடுதலைப் புலிகளின் கே.பி. (K.P.) யுடன் 26 பிப்ரவரி 2009 மலேசியாவில் சந்திப்பை மேற்கொண்ட போது 25 முதல் 50 வரையான விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் வெளியேற்றி, உடனடியாகவே வேறு நாட்டுக்கு கொண்டு செல்வதானால் இத்திட்டம் பரிசீலிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதைப் பற்றிய மேலதிகமான பேச்சுக்களுக்காக நோர்வை தரப்புகள் கே.பியை நோர்வேக்குச் சென்று மற்றைய அவர்களது புலம்பெயராளர்களுடன் கலந்து தீர்மானிக்கக் கேட்டாலும் கே.பி. அவற்றைத் தவிர்த்துக் கொண்டார்.

கே.பியுடனான சம்பாசணைகள் இந்தக் காலகட்டங்களில் நடத்திய போதுதான், தன்னில் நம்பிக்கை இழந்து வெளியே சரண் அடைந்து வெளியேற கே.பி. கூட கேட்கிறார் எனவும் மனம் வருந்தி, அவ்வளவு அதிசய வெற்றிகளை தாங்கள் அசாதாரண நிலைகளிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளோம் என்பவற்றையெல்லாம் நினைவு கூர்ந்து, நம்பிக்கையாக இருக்க வேண்டும் என பிரபாகரன் தங்களிடம் கூறினார் எனவும் செய்திகள் போரின் பின்னால் விடுதலைப் புலிகளின் ஆதரவான ஊடகங்களிலும் பின் கே.பி. ஸ்ரீலங்கா இராணுவத்தினால் கடத்தப்பட்டது (அன்றில் அவர்களோடு சேர்ந்து சென்றதில்) ஏற்பட்ட பிரிவுகளில் கே.பி. சார்பானவர்களிடமும் அவர்களுக்கு எதிரானவர்களிடம் இருந்தும் தரப்பட்டன.

அவற்றில் பிரபாகரன் 'விடுதலைப் போரின் வடிவங்கள் மாறலாம், ஆனால் விடுதலைக்கான போராட்டம் தொடர வேண்டும்', 'பாதைகள் வேறானாலும் லட்சியம் தொடர வேண்டும்' என தோழர்களுக்கு அறிவித்ததையும், இன்றும் அவரது விசுவாசிகளின் தாரக மந்திரங்களாக அவர்களுடன் இருக்கின்றன.

பின்னர் வந்த பிரிவினைகளால் எழுந்த விபரீத செய்திகளால், கே.பியிடம் பிரபாகரன் தன்னை வலயத்தில் இருந்து வெளி செல்வதற்காக ஒரு உத்தியை ஏற்படுத்தினால் அங்கிருந்து முன்னறலாம் எனக் கேட்டார் எனவும், அந்த ஏற்பாடுகளால் பிரபாகரனும் குடும்பமும் மெய்க்காப்பாளர்களும் தங்களைச் சுற்றியுள்ள தடைகளை உடைத்து வெளியேற முயன்ற போது கொல்லப்பட்டனர் எனவும் பல வகையான தரவுகள் உள்ளன. இவற்றுடைய ஆக்கங்களின் அடிமட்டத்தில் நோக்கினால் நோர்வே முன்வைத்த சரணடைவுக்கும் பாதுகாப்புக்கும், கே.பி. அவற்றை ஏற்கும்படி கேட்டும் பிரபாகரன் அதற்கு மறுத்துவிட்டார். அசாதாரண நிலைகளில் இருந்து அதிசய வெற்றியை மனதில் கொண்ட பிரபாகரனுக்கு இந்த வேளை அது கைகூடவில்லை.

(வளரும்...)



காலைக்கதிர்
Kalaikkathir

# உலகளவில் தடுப்பூசிகளை தயாரிப்பதில் இந்தியா முக்கிய பங்கு என்கின்றது அமெ.

உலகளவில் தடுப்பூசிகளை தயாரிப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. உலகளவில் கோவிட் 19 க்கு எதிரான தடுப்பூசிகளை வழங்குவதில் நாடு ஆற்றிய முக்கிய பங்கை ஒப்புக்கொண்ட வெள்ளை மாளிகை இவ்வாறு கருத்து வெளியிட்டது.

அதன் நம்பமுடியாத உற்பத்தித் திறன் காரணமாக, (இந்தியா) தடுப்பூசிகளின் முக்கிய ஏற்றுமதியாளராக உள்ளது என்று வெள்ளை மாளிகையின் கொரோனா வைரஸ் பிரதிபலிப்பு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஆஷிஷ் ஜா செவ்வாயன்று வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒரு கேள்விக்கு பதிலளித்த டாக்டர் ஜா, ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா இடையேயான ஒரு மூலோபாய பாதுகாப்பு உரையாடலான குவாட் கூட்டாண்மை ஜோ பிடன் நிர்வாகத்திற்கு முக்கியமானது என்று கூறினார்.

இந்தியா உலகத்துக்கான தடுப்பூசிகளின் முக்கியமான உற்பத்தியாளர் என்று நான் நினைக்கிறேன். அதாவது இந்தியாவிற்கு மட்டுமல்ல, (உலகிற்கே) இது மிகவும் முக்கியமான விடயம், என்று அவர் வெள்ளை மாளிகை செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

உலகிற்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கான பிடென் நிர்வாகத்தின் முடிவைப் பாதுகாத்து, ஒவ்வொரு குறைந்த மற்றும் பல குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கும் அமெரிக்கா தொடர்ந்து அவற்றைக் கிடைக்கச் செய்யும் என்று டாக்டர் ஜா கூறினார்.

COVAX மூலம் இலவச தடுப்பூசிகளைப் பெறுவதற்கு தகுதியுடைய சுமார் 100 நாடுகள் உள்ளன – நன்கொடைக்காக இன்னும் இருக்கும் தடுப்பூசிகளை நாங்கள் வழங்குகிறோம், என்று அவர் கூறினார்.

டாக்டர். ஜாவின் கூற்றுப்படி, அமெரிக்காவைத் தாக்கிய ஒவ்வொரு பெரிய (கோவிட்) மாறுபாடும் நாட்டிற்கு வெளியில் இருந்து உருவானது.



டாக்டர் ஆஷிஷ் ஜா

எனவே, நாம் எப்படியாவது நம்மை நாமே சுவராக்கிக் கொள்ளலாம் மற்றும் உலகின் பிற பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதன் மூலம் பாதிக்கப்படக்கூடாது என்ற கருத்து உள்ளமையும் கவனிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

"இது போன்ற பரவக்கூடிய வைரஸ்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது மட்டுமல்ல. எனவே நீங்கள் இதைப் பற்றி மிகக் குறுகிய சுயநலத்துடன் சிந்தித்தால் கூட, உலகின் பெரும்பாலான தடுப்பூசிகளைப் பெறுவது மிகவும் முக்கியம், தடுப்பூசி திட்டத்தை உருவாக்க நாங்கள் உதவுகிறோம். ஆனால் சுயநலத்திற்கு அப்பால், அமெரிக்கா உலகில் ஆழமாக ஈடுபட்டுள்ள ஒரு நாடு என்பது உங்களுக்குத் தெரியும் – என்று அவர் மேலும் கூறினார்.

'முந்தைய ஜனாதிபதியிடமிருந்து மிகவும் வித்தியாசமான' விதத்தில் உலகளாவிய ஆரோக்கியத்தில் அமெரிக்கத் தலைமையை பிடென் மீட்டெடுத்தார் என்று டாக்டர் ஜா கூறினார்.

எனவே, முழு காரணங்களுக்காக, அமெரிக்கா தொடர்ந்து முன்னணியில் இருப்பது மிக மிக முக்கியமானது. 4.02 பில்லியன் யூரோக்கள் அமெரிக்கர்களை சிறப்பாகப் பாதுகாப்பதற்கும் உலகை சிறப்பாகப் பாதுகாப்பதற்கும் ஒரு சிறிய முதலீடாகும், என்று அவர் கூறினார்.

# சுனக்கின் வெற்றி பெரிய சாதனை!



ரிஷி சுனக்

- அஜீஷி அகர்வால் -

இங்கிலாந்து பிரதமராக ரிஷி சுனக் நியமிக்கப்பட்டமையை ஒரு 'பெரிய சாதனை' என்று கூறிய இங்கிலாந்துக்கான முன்னாள் இந்திய உயர் ஸ்தானிகர் ருச்சி கனாஷ்யம், பிரிட்டனின் முதல் இந்திய வம்சாவளி பிரதமராக சுனக் தேர்ந்தெடுக்கப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இங்கிலாந்தின் வெள்ளையர் அல்லாத முதல் பிரதமர் அவர். இங்கிலாந்து ஒரு பெரிய சக்தி. இது ஒரு காலனித்துவ சக்தியாக இருந்து வருகிறது, இன்று அவர் பிரதமராக இருப்பது நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய ஒரு பெரிய சாதனை என்பதை நாம் அனைவரும் அறிவோம். அவர் இங்கிலாந்தின் பிரதம மந்திரி என்பதை நாங்கள் உணர்ந்தாலும், அவர் தனது நாட்டின் நலன்களுக்காக பாடுபடுவார், அதாவது ஐக்கிய இராச்சியம், இருப்பினும், இது அனைவருக்கும் மகிழ்ச்சியான தருணம், தனிப்பட்ட முறையில், எனக்குத் தெரிந்ததற்காக நான் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் அவர் இருந்தார் என்று முன்னாள் உயர்ஸ்தானிகர் கூறினார்.

இந்தியா மற்றும் இங்கிலாந்து உறவுகளை மேலும் பாராட்டிய முன்னாள் உயர்ஸ்தானிகர், யார் ஆட்சிக்கு வந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு வலுவாக இருக்கும் என்றார்.

"இந்தியா – இங்கிலாந்து உறவுகள், இங்கிலாந்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும், உறவுகள் வலுவாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.ஏனெனில் இரு நாடுகளும் இந்த நேரத்தில் உலகளாவிய கண்ணோட்டத்தைப் பகிர்ந்து கொள்கின்றன. பல விடயங்களில், எங்களுக்கு ஒரே மாதிரியான கருத்துக்கள் மற்றும் நல்ல கருத்துக்கள் உள்ளன. இந்தியாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையே வலுவான உறவு. எனவே, ரிஷி சுனக்கைப் பொறுத்தவரை, அவருக்கு கீழ், எங்கள் உறவை மேலும் வலுப்படுத்துவதை நான் எதிர்பார்க்கிறேன்."




ருச்சி கனாஷ்யம்

இங்கிலாந்தின் பொருளாதார நிலைமையை வலியுறுத்திய முன்னாள் உயர்ஸ்தானிகர், இது மிகவும் கடினமானது என்றும், அவர் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறார் என்பதைக் காலம்தான் காட்டும் என்றும் கூறினார்.

இங்கிலாந்தின் பொருளாதார நிலைமை மிகவும் கடினமானது.பொருளாதார நிலைமை மட்டுமல்ல, உண்மையில், பிரெக்சிட் தொடர்பான பிரச்சினைகள் இன்னும் முழுமையாக தீர்க்கப்படவில்லை. உதாரணமாக வடக்கு அயர்லாந்து பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. ஸ்கொட்லாந்திலும் ஒரு ஏமாற்றம் உள்ளது. இங்கிலாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறது. எனவே அந்த சவால்கள் அனைத்தும் அவருக்கு முன்னால் உள்ளன. இங்கிலாந்து முன்னெப்போதும் இல்லாத எரிசக்தி நெருக்கடி மற்றும் அதிக பணவீக்கத்தை எதிர்கொள்கிறது. அதனால் அவருக்கு முன்னால் அவர் எதிர்கொள்ளும் சவாலான வேலை அவர் மேலும் கூறினார்.

"ரிஷி சுனக்கின் புத்திசாலித்தனம் மற்றும் திறமைக்கான அங்கீகாரம் இது என்று நான் நினைக்கிறேன், அவர் கொன்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அமோக ஆதரவைப் பெற்றார். மேலும் அவர் போட்டியின்றி பிரதமராக ஆனார். எனவே, இது ஒரு கடினமான சவால். காலம் தான் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதைக் காட்டும். அவர் சிறப்பாக செயல்படுகிறார். அந்த சவால்களை அவர் எவ்வளவு சிறப்பாக சமாளிக்கிறார் என்பதில் விடயம் உள்ளது. ஆனால் அவர் பொருளாதாரம் மற்றும் நிதியத்தின் தர்க்கத்தில் நன்கு அறிந்தவர் என்பதால், இந்த கடினமான வேலைக்கு அவருக்கு நல்வாழ்த்துக்கள். – என்று அவர் மேலும் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி ட்விட்டரில் சுனக்கின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தார், மேலும் இந்தியா – இங்கிலாந்து உறவுகளை நவீன கூட்டாண்மையாக மாற்ற அவருடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகவும் கூறினார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# கூத்தமைப்பு ஆகிறதா, கூட்டமைப்பு?

## அக்கரை அக்கறை அலசல்



**என்.சத்தியமூர்த்தி**

அரசமைப்புச் சட்டத்தின் இருபத்தி இரண்டாவது திருத்த சட்டத் திருத்தம் மீதான நாடாளுமன்ற வாக்களிப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டுபட்டுள்ளது. கூட்டமைப்பின் மொத்தமுள்ள பத்து எம்.பிகளில் சம்பந்தன் மற்றும் வினோநாதரகலிங்கம் ஆகியோர் உடல் நிலை காரணமாக பங்கேற்கவில்லை. சாணக்கியன் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டுள்ளார். மீதமுள்ள ஏழு உறுப்பினர்களில் ஆறு பேர், புதிய சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். சுமந்திரன் மட்டும் வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை.

உண்மை என்னவோ, கூட்டமைப்பின் வாக்குகள் எதுவுமே இல்லாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தச் சுற்றில் வெற்றி பெற்றிருப்பார். இன்னும் சொல்லப்போனால், மொத்தமுள்ள 225 உறுப்பினர்களில், 179 பேர் ஆதரவாக வாக்களித்தனர். எதிராக ஒரேயொரு வாக்கு விழுந்தது. மீதமுள்ள 45 பேர் வாக்களிப்பை புறக்கணித்தனர். அவர்களில் முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அடங்குவார். சுமந்திரனை தவிர மீதமுள்ள 44 பேருமே, அரசிற்கு முண்டுக் கொடுத்து தாங்கும் மொட்டு கட்சி என்று அறியப்படும் இலங்கை பொதுஜன முன்னணியை சார்ந்தவர்கள்.

எதிர்வரும் வாரங்களில், மொட்டு கட்சியின் விரிசல் என்பது உண்மையிலேயே நிகழ்ந்ததா, அல்லது அது மஹிந்த தலைமையின் மற்றுமொரு திட்டத்திற்குக் கிடைத்த வெற்றியா, என்பது ஊடக விவாதப் பொருளாகும். அது போன்றே, கூட்டமைப்பினுள் தோன்றியுள்ள இந்தப் பிரிவும் விவாதப்பொருளாகும். ஆனால், இரண்டு விடயங்களிலுமே, அடுத்தடுத்து வரவிருக்கும் நிகழ்வுகள், தற்போதைய தீர்சனத்தை பின்னுக்குத் தள்ளிவிடும்.

### அரசியல் எதிர்காலம்

பத்திரிகை செய்திகளின் படி, நாடாளுமன்ற விவாதத்தின் போது 22 ஆவது



திருத்தத்திற்கு எதிராக சுமந்திரன் ஆணித்தரமான காரணங்களை முன் வைத்து பேசினார். என்றாலும், அவரால் வேறு எந்தவொரு கூட்டமைப்பு உறுப்பினரையும் தன் பக்கத்திற்கு இழுக்க முடியவில்லை.

பிற தமிழ்க் கட்சிகளும் தங்கள் போக்கிற்கே முடிவு எடுத்தன. வழக்கம் போல், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர்களும் வாக்கெடுப்பைப் புறக்கணித்தனர். தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் ஒரே உறுப்பினரான விக்னேஸ்வரன் அரசிற்கு ஆதரவாக வாக்களித்தார். இது தவிர, வடக்கில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. மற்றும் கிழக்கில் பிள்ளையான் ஆகியோரும் சட்டதிருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இந்தப் பின்னணியில், தமிழர் தரப்பிலிருந்து அரசிற்கும், சர்வதேசத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள செய்தி என்ன? ஒன்று, ரணில் தரப்பிலான அரச தரப்புடன் வேலை செய்ய தாங்கள் தயாராக இருக்கிறோம். இரண்டு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் அரசுடன் செயலாற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், தற்போதைய சூழலில், சுமந்திரன் தவிர ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்தகைய முடிவை ஆதரிக்கிறார்கள். சுகவீனமுற்றிருக்கும் சம்பந்தன் மற்றும் வினோ, வெளிநாடு சென்றிருக்கும் சாணக்கியன் ஆகியோர் அரசிற்கு எதிராக வாக்களித்தாலும், கூட்டமைப்பினுள் 6 – 4 என்ற எண்ணிக்கையில், அரசு ஆதரவு நிலைக்கு பெரும்பான்மை கிடைத்திருக்கும்.

என்றாலும், சம்மபந்தன் உடல்நலமாக இருந்திருந்தால் தனது மூப்பு. அறிவு மற்றும் வாதாடும் திறனால், மொத்தமுள்ள பத்து கூட்டமைப்பு எம்பிகளும் ஒரு சேர்ந்த முடிவை எடுப்பதற்கு தலைமைத்துவம் கொடுத்திருப்பார். அவருடைய சுகவினத்தால் பாதிக்கப்பட்டது, கூட்டமைப்பின் கட்டுக்கோப்பான நாடாளுமன்ற பயணமும்தான். இதுவே, தமிழ் மக்களுக்கு, கூட்டமைப்பு குறித்தும், தங்களது அரசியல் எதிர்காலம் குறித்தும் குறிப்பிட்ட செய்தி ஒன்றை தெரிவித்துள்ளது.


### மறந்துபட்ட விடயம்

இதில் குறிப்பிடத்தக்க விடயம் ஒன்று உள்ளது. இது அண்மை கால நிலைவரங்களையும் நிலைப்பாடுகளையும் வைத்து நோக்கும் போது, ஒரு மறந்துபட்ட விடயமும் கூட. அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நாடாளுமன்றம் உறுதி செய்த போது, அவருக்கு ஆதரவாக ஐந்து அல்லது ஆறு கூட்டமைப்பு எம்.பிகள் வாக்களித்தனர் எனக் கருதப்பட்டது. அந்த இரகசிய வாக்கெடுப்பில், ஐந்து கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்று ரணில் தரப்பு கூறியதாக வாக்கெடுப்புக்கு முன்னரே செய்தி வெளியானது.

ஆனால், அவாகளில் பலரும் வாக்கெடுப்பிற்கு பின் இதனை அப்பட்டமாக மறுத்தார்கள். தற்போதைய திறந்த வாக்கெடுப்பு முடிவை வைத்து நோக்கும் போது, அன்றைய செய்திகளில் உண்மை இருந்ததாகவே கருத இடமிருந்தது. அவ்வாறானால், தங்களது வாக்குகளை கூட்டமைப்பு உறுப்பினர்கள், ரணில் தரப்பிற்கு விற்றார்கள் என்ற வதந்தியிலும் உண்மை இருந்ததா? அது மட்டும் ஆண்டவனுக்கே வெளிச்சம்.

எது எப்படியோ. இந்த இரண்டு வாக்குகளுக்கு இடையே மறைந்திருக்கம் கூட்டமைப்பு தலைமை குறித்த மற்றொரு செய்தியும் உண்டு. இரண்டு முறையும் ரணிலுக்கு ஆதரவாக பெரும்பாலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் வாக்களித்திருந்தால், சம்பந்தனின் வாக்கிற்கு விலை இல்லை என்பதே பொருள். அதிலும் குறிப்பாக, ரைகசிய வாக்கெடுப்பு என்று வந்த பிறகு, உறுப்பினர்கள் தங்கள் இஷ்டத்திற்கு வாக்களித்து விட்டு, தலைமையின் அறிவுறுத்தல் படியே நடந்தனர் என மார்தட்டிக் கொள்ளமுடியும்.

இது இவ்வாறானால், சம்பந்தன் தலைமை தாங்குவதாக கருதப்படும் கூட்டமைப்பு, கூத்தமைப்பாக மாறிவிட்டதா, என்ன? உண்மையைசொல்லப்போனால், அவ்வாறான மாற்றம் துவங்கி சில மாதங்கள் ஆகி விட்டன. எப்போது, தற்போதைய நிகழ்வுகள், அதிலும் குறிப்பாக நாடாளுமன்ற வாக்களிப்புகள் அதனை ஊர்ஜிதம் செய்கின்றன. அவ்வளவுதான்.



### ஊசலாடும் உண்மை

எப்போது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைப்பிற்குள் தனி ஆவர்த்தனம் வாசித்து கூட்டம் சேர்க்க துவங்கினாரோ, அப்போதே சம்பந்தனின் தலைமை கேள்விக்குறி ஆகி விட்டது. ஜனாதிபதி தேர்வு வாக்களிப்பில் அதுவே நிலைமை. ஆனால் அதற்கான ஆதாரம் இப்போது கிடைத்துள்ளது. அவ்வளவு தான்.

அதே சமயம், ஒரு மாற்றுக் கருத்திற்கும் இடமிருக்கிறது. தற்போதைய வாக்களிப்பு குறித்து, தலைவரான சமபந்தனின் நிலைபாடு என்ன என்பது தெரியவில்லை. என்றாலும், அவரை சுமந்திரன் தனது கைப்பாவையாக மாற்றி விட்டார், என்ற சமூக வலைதளங்களின் குற்றச்சாட்டுகள் தொடருகின்றன.

எனவே, இரண்டில் எது உண்மை, அல்லது இரண்டு நிலைபாடுகளிலும் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பது தெரியவில்லை. அல்லது, உண்மை இந்த இரண்டு தர்க்க விடயங்களுக்கும் இடையே ஊசலாடுகிறதா? இது குறித்த உண்மை நிலைமை தெரியாமலே கூட போகலாம்.

### இரட்டை நிலைப்பாடு

அரசிற்கு ஆதரவாக வாக்களித்த கூட்டமைப்பு உறுப்பினர்களின் உண்மையான நிலைப்பாடு என்ன? இந்த ஆதரவு வாக்கு மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி பெற்றுக் கொள்ள அவர்கள் இசைவார்களா? அல்லது, இரண்டுமே வேறு வேறு பிரச்சனைகள் என்ற நிலைபாட்டை எடுப்பார்களா?

காரணம், அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த அவாகள் தயார் என்றால், சர்வதேசத்தைப் பயன்படுத்தி, ஜெனிவா மனித உரிமை அமைப்பில் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதை அவாகள் தற்காலிகமாகவேனும் நிறுத்திக் கொள்ளவேண்டும். அல்லது. தென்னிலங்கை தரப்புகள் கூறுவது போல், சர்வதேசத்தின் கை பாவையாகவே கூட்டமைப்பு செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டை மறுக்கும் முகமாக செயலாற்றுவார்களா?

இவ்வாறு இரட்டை படகு சவாரி செய்யத் துவங்கியதால் மட்டுமே, இனப்போர் முடிந்த காலகட்டத்தில் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசுடனான அரசியல் பேச்சுவார்த்தைகள் முறிந்தன. அந்த காலகட்டத்தில், பேச்சுவார்த்தையில் பாரிய முன்னேற்றம் இருந்ததாகக் கருத இடமிருந்தது. அவ்வாறானால். உள்குத்து மூலம் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளை இல்லாதாக்கிய புண்ணியவான் யாரோ? அல்லது, யார், யாரோ?

அந்த விதத்தில், சர்வதேசத்திடம் அரசிற்கு அழுத்தம் கொடுக்கச் சொல்லி கோருவது, கூட்டமைப்பு அல்லாத தமிழர் தரப்புகளுக்கு ஒரு முறைப்பாடு. அவர்களின் கோரிக்கைகளை சர்வதேசம் ஒரு பொருட்டாக மதித்தது கூட இல்லை. அவர்களது கவனம் எல்லாம் கூட்டமைப்பின் பக்கமே இருந்து வந்துள்ளது.

### உள் குத்து அரசியல்

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், தலைமைப் பதவியை தனதாகவே ஆக்கிக்கொண்ட தமிழரசு கட்சியும் பிற அங்கத்துவ கட்சிகளான அடைக்கலநாதனின் தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலை கழகத்திற்கும் இடையேயான முறுகல்கள் பிரசித்தி பெற்றவை. சம்பந்தன் என்ற தனி மனிதனுக்கு தமிழ் மக்களிடையே இருந்து வந்த மரியாதை மற்றும் தமிழரசின் வீடு தேர்தல் சின்னத்திற்கு கிடைத்த அலாதியான ஆதரவு ஆகியவையே கூட்டமைப்பு சிதறிவிடாமல் இந்த அளவிற்காவது ஒன்றாகச் செயல்படுவதற்கு காரணம்.

அது தற்போது, தேர்தல் இல்லாமலே முறிந்திருக்கிறது. இதற்கு அடுத்த கட்டத்தில், இது எவ்வாறு தமிழரசுக் கட்சியின் மீது தாக்கம் ஏற்படுத்தப் போகிறது என்ற கவலையும் எழுகிறது. தற்போதைய பிரச்சினையில், மாவை சேனாதிராஜா உள்ளிட்ட தமிழரசின் மூத்த தலைவர்களுக்கு இடமில்லை. ஆனால், எப்போது சிறீதரன் போன்றோர், சுமந்திரனுக்கு எதிரான ஒரு நிலைபாட்டை பகிரங்கமாக எடுத்தார்களோ, அப்போதே தமிழரசின் உள் கட்சி விவகாரம் அடுத்த கட்டத்தை அடைந்து விட்டது.

இப்போது அது எந்த வடிவம் எடுக்கிறதோ தெரியவில்லை. ஆனால், அது இனப்பிரச்சனை என்பதை தாண்டி சுமந்திரனை மையமாக வைத்த அரசியலாகி விடும். இதில், மாவை போன்றோர் சர்வதேசத்தின் ஆதரவிற்காக சுமந்திரன் என்று எதிர்பார்க்கலாம். அதே சமயம், சுமந்திரனோடு ஒட்டி, அவர் ஆதரவு நிலையெடுப்போரை, ‘சர்வதேசத்தின் ஏஜெண்ட்’ என்றும் ‘துரோகிகள்’ என்றும் முத்திரை குத்த ஒரு கூட்டம் மூளையை தீட்டிக் கொண்டு வேலை செய்யும்.

அண்மையில், தனது தீபாவளி வாழ்த்து செயதியில், ஜனாதிபதி ரணில் உள்பட யாரும் தமிழர்களை இனி ஏமாற்ற முடியாது, என்று சம்பந்தன் சொல்லி இருக்கிறார். அது உண்மைதான். இனி, அந்த



வேலையை தமிழரசு மற்றும் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் தலைமைகளே செய்யும். அதற்கு தென்னிலங்கை அரசியல் தலைமைகள் மற்றும் அரச தலைமையின் உதவி தேவை இல்லை, என்பது போலவே, நிழச்சிகள் அரங்கேறி வருகின்றன.

இதில் அடுத்த கட்டம், ஈ.பி.டி.பிக்கு அப்பாலும் தமிழ் பிரதிநிதிகள் ரணில் அமைச்சரவையில் சேருவது. அவ்வாறான முடிவிற்கு ஜனாதிபதி வருவாரேயானால், தமிழ் தலைவர்களில் ஒருவரை ஒருவர் தாக்கி பேசும் அரசியல் உச்சக்கட்டத்தை அடையும். ஆனால், அரசியல் சாணக்கியனான ரணில் கூட, அவ்வாறான முயற்சிகளை முன்னெடுத்து, சம்பந்தனின் சாபத்திற்கு ஆளாக விரும்பமாட்டார்.


முன்பு, சம்மந்தன் கொடுத்த சாபம், அன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடயத்தில் பலித்துவிட்டது என்னவோ உண்மை. ஆனால், அதனையும் தாண்டி, தமிழர் வாக்குகளையும் நாடாளுமன்ற ஆசனங்களையும் குறிவைக்கும் ரணில், வயது மூப்பு காரணமாக உடல் நலம் குன்றி இருக்கும் சம்பந்தனை மட்டம் தட்டுவது போல் அரசியலை செய்து, தமிழ் மக்களின் சாபத்திற்கு இடமாக விரும்பமாட்டார் என்று நம்பலாம்!

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# கீசடாக்ஷர மந்திர மகிமை பேசும் கந்த சஷ்டி கவசம்




- சிவஶ்ரீ. தி. மயூரகிரி சிவாச்சார்யார் -

தேவராஜசுவாமிகள் அருளிச் செய்த ஸ்கந்தசஷ்டி கவசங்கள் ஆறு. அதிலும் பெரிதும் புகழ் பெற்ற திருச்செந்தூர் கவசம் தனிச்சிறப்புடையது.

முருகனடியார்கள் நாவில் என்றும் தவளும் அற்புத வரிகள் கொண்ட இந்த கவசம் சஷ்டியை நோக்கச் சரவணபவனார் என்று தொடங்கும்.

முருகனின் திருமந்திரச்சிறப்பைப் பேசும் இந்நூல் மந்திர தந்திர ஔதமாக கொண்டாடப்படுகிறது.

இந்நூற் பொருள் கருதி பன்னிரு பிரிவுகளாக நோக் கலாம்.

1 முதல் 15 அடிவரை முருகன் வரவேற்பும்,
16 முதல் 32 அடிவரை மந்திரமாலையும்,
33 முதல் 58 அடிவரையில் கேசாதிபாத (முடி முதல் அடி வரையான) வருணனையும்,
59 – 106 வரையில் மெய்க்காப்புக்கோரலும்,
107 – 157 வரை இடர் களைதலும்,
158 – 161 வரையில் உலக வசியமும்,
162 – 179 வரையில் முருகன் நாமாவளியும்,
180 – 185 வரையில் திருநீற்றுப் பெருமையும்,
186 – 192 வரையில் வாழ்த்துரையும்,
193 –199 வரையில் குறை இரத்தலும்,
200 – 225 வரையில், சாதனமும் அதன் பயனும்,
226 – 230 வரையில் நமஸ்கார வணக்கமுமாகிய
பன்னிரண்டு வகையாக நூற் பொருள் கருதி பகுத் துப்படித்து உணரலாம்.

தவிரவும், சஷ்டியை நோக்கச் சரவணபவனார் என்றே ஆரம்பிக்கும். சரவணபவ என்பது ஆறெழுத்து மந்திரமான சடாக்ஷரம்.

சரவணபவன் – முருகப்பெருமான் சரவணப் பொய் கையில் தங்கியதால் இப்பெயர் பெற்றார். இக்கவச ஆசிரியர் இதையே சடக்கர மந்திரமாகக் கூறுகின்றார்.

ஶ்ரீமத். தண்டபாணி சுவாமிகள் தாமியற்றிய வள்ளிநாயகிப் பிள்ளைத் தமிழ் செங்கீரைப்பருவம் செய்யுள் ஒன்றில் –

மந்திர சடக்கரங் கருதித் தவம்புரியு மாயோக முனி வருக்கும்.

என்னுந்தொடரில் வருஞ் சடக்கரம் என்பதற்குச் சகாராதி ஆறு எனக்குறிப்புரையுள் கண்டுள்ளது.

திருமுருகாற்றுப்படையில் 186வது அடியில்,

ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கில் நவிலப் பாடி

என்றதன் உரையில், ஆறெழுத்தினைத் தன்னி டத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய மறைய உச்ச ரிக்கப்படும் மந்திரத்தை அது

“நமோ குமாராய”

என்கின்றார் உரையாசிரியரான நச்சினார்க்கினி யார்.

கல்லாடம் முருகக்கடவுள் துதியில் 50 – 51 ஆம் அடிக்கு மகாவித்துவான் மயிலேறும் பெருமாள் பிள் ளையவர்கள் எழுதிய விசேடவுரையில் குமாராய நம: என்றெழுதப்பட்டுள்ளது.

பாம்பன். ஶ்ரீமத். குமரகுருதாச சுவாமிகள் “ஆறெ ழுத்துண்மை என்ற தலைப்பில்,

அற்புத மாகிய அருமறை மொழிபோல் வெற்புயர் புவனம்பல் விளங்கிடு மாறு பற்பல தேவர்கள் படர்ந்த விண்ணுறினும் தற்பரமாவது சரவணபவவே.

என்று ஐயமறக் கூறுகின்றார். .

வடமொழியிலுள்ள டாக்ஷர மாலிகாஷ்டோத்தர சத நாம ஸ்தோத்திரத்தில் சரவணபவ என்று சொல்லப்பட் டிருக்கிறது.

வித்வான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் எழு திய கந்த சஷ்டி கவச விளக்கவுரையில்,

சடக்கர மந்திரம் – சரவணபவ.

இந்த ஆறு எழுத்துக்களிலும் உள்ள அ கரமாகிய உயிரெழுத்துக்கு, ச் ர் வ் ண் ப் வ் என்னும் ஆறு மெய் யெழுத்துக்களும் உடம்பாகும்.

அவ்விந்துவில் இருந்தும் பிரம்மமயமான அகார முதிக்கும் பரமசிவன் சிற்சத்தி விந்துவை க்ஷோபிக்க (கலக்க) என்று பெரியோர் கூறுவதால், அந்த அகாரம் சரவணபவ என்னும் மூலமந்திரத்தின் ஆறு எழுத்துக் களினும் உள்ளதாதலின், அம்மந்திரம் சிறந்ததா யிற்று என்கிறார்.

ஶ்ரீமத். அருணகிரிநாதர், இதைத்தான் –

ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த – பெருமாளே. என்று நுட்பமாகத் தெரிவித்தார்.

இந்த அகாராதி ரோடச ஸ்வரத்திற்கு (வடமொழி அ முதலான பதினாறு உயிரெழுத்திற்கும்) பரதேவதை சிவன்.

ககராதி க்ஷகாராந்தாக்ஷரங்களுக்கு (க முதலாக, க்ஷகாரம் இறுதியாகவுள்ள) பரதேவதை சத்தி.

ஆகையால்ஸரவணபவ என்னும் டக்ஷர மனு சிவ சக்தி சொரூபமானது.

இந்த அகராதி க்ஷகாராந்தமாகவே, பெரிதும் பயன் பாட்டிலுள்ள ஸ்காந்த புராணத்துச் சுப்பிரமண்ய ஸஹஸ் ரநாமம் அமைந்திருப்பதும் சிந்திக்கத்தக்கது.

ஆக, கந்த சஷ்டி கவசம் பல இரகசியங்களை புதைத்து வைத்திருக்கும் தெய்வீகப் பொக்கிஷமா கும்.

அது கந்த சஷ்டி காலத்திற்கு மட்டுமே உரியதன்று. எப்போதும் அதை பாராயணம் செய்யலாம்.

வடமொழியில், குமாரதந்திரத்தில் சுப்பிரமண்ய கவசம் என்றொன்றை காண்கிறோம்.

அது போல தமிழில் மந்திர சக்தி மிக்க அற்புத துதி கந்த சஷ்டி கவசமாகும். நாமும் அதை ஓதி உணர் வோம். – பாடிப்பணிவோம்.

# இந்த 2022 ஆம் ஆண்டு சுபகிருது வருஷ ஸ்கந்த சஷ்டி விரதம் குறித்த சில தகவல்கள்

* முருகப்பெருமானுக்கு கார்த்தி கேயன் என்று திருநாமம். அவனுக்கு கார்த்திகை நட்சத்திர வழிபாடு சிறப்பு.

* கார்த்திகையை வடமொழியில் கிருத்திகை என்று சொல்வர். எனவே, மாதம் தோறும் வரும் இந்த கிருத்திகை / கார்த்திகை நட்சத்திரங்களில் முருக வழிபாடு சிறப்புறச் செய்வர்.

* இப்படி மாதா மாதம் கார்த்திகை நட்சத்திரங்கள் சிறப்பு ஆயினும் கார்த் திகை என்ற பெயர் கொண்ட மாதம் முழு மையும் மிகவும் சிறப்புடையது.

* இந்த கார்த்திகை மாத வளர்பிறை சஷ்டி ஸ்கந்த சஷ்டி எனப்படுகிறது. அந்த மாத வெள்ளி கிழமைகள் கூட முருக வணக்கத்திற்கு வெகு சிறப்பு பெறுகிறது.

* உடனே, ஐப்பசி மாதத்தில் தான் கந்த சஷ்டி வருமே என்று கேட்பீர்கள். ஆம்.அது தமிழ் மரபில் சௌரமான படி ஐப்பசி ஆயினும், சாந்திரமானப்படி கார்த்திகை ஆகும்.

* சாந்திரமானம் என்பது அமாவா சையை அடுத்து ஆரம்பிக்கும். எனவே, தீபாவளி அமாவாசைக்கு அடுத்த நாள் சாந்திரமான பஞ்சாங்கப்படி, கார்த்திகை தொடங்கி விடும்.

* அதையும் எங்கள் பஞ்சாங்கங் களில் குறிப்பிட்டிருப்பார்கள். உதாரண மாக, கொக்குவில் இரகுநாதையர் வாக் கிய பஞ்சாங்கம் கிருத்திகா சுத்தம் என் றும், மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கம் கார்த்திக சுத்தம் என்றும் குறிப்பிட்டி ருக்கக் காணலாம்.

* இந்த நாளில்தான் ஸ்கந்தசஷ்டி விரதம் ஆரம்பிக்கிறது. ஆக, சாந்த்ர மான கார்த்திகை மாத ஆரம்பநாளி லேயே முருகவழிபாடு மிகச்சிறப்பாக தொடங்கி விடுகிறது. அது சௌரமான கார்த்திகையிலும் நீள்கிறது.

* எனவே, இம்மாத வெள்ளிக்கிழமை வார விரதம், கந்தசஷ்டி திதி விரதம், கார்த்திகை நட்சத்திர விரதம் எல்லாமே முதன்மை பெறுகிறது.

* இந்தவகையில் தான் இலங் கையில் இந்த ஆண்டு 26.10.2022 புதன்கிழமை முதலாக 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை வரை கந்தசஷ்டி விரதம் அனுசரிக்கப்பட்டு 31.10.2022 திங்கட்கிழமை பாரணை, திருக்கல்யா ணம் நிகழ்கிறது.

* தமிழகத்தில் பெரும்பாலும் ஆறு நாள் என்பதை பல தலங்களிலும் நிறைவு நாளிலிருந்தே எண்ணுவதால் 25 ஆம் திகதியே ஆரம்பித்திருக்கிறார் கள்.

* கருணைக்கடலான கார்த்திகேயக் கடவுள் வழிபாட்டை உணர்வு பூர்வமாக எவ்வாறு அனுசரித்தாலும் அவன் எங்க ளைக் காத்தருள்வான் என நம்புவோம். அவன்எந்தாயும்எமக்கருள்தந்தையுமா னவன்.

**- சிவஶ்ரீ. தி. மயூரகிரி சிவாச்சார்யார் -**

# இரட்டைக் குடியுரிமையுடைய எம்.பிக்களின் சொத்துக்களை அரசுடைமையாக்கவேண்டும்!

## கம்மன்பில வலியுறுத்து

இரட்டைக் குடியுரிமையுடையோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவார்களாயின் அவர்களது சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கும், தாம் இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் அல்லர் என்று நாடாளுமன்றத்தில் சத்திப்பிரமாணம் செய்ய வேண்டும் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவற்றை நடைமுறைப்படுத்தாவிட்டால் இரட்டை குடியுரிமையுடையோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவதைத் தவிர்க்க முடியாது என்று பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்தோடு 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இரட்டை குடியுரிமை கொண்ட 10 பேரும் , தற்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் ஒருவரும் காணப்படுகின்றனர் எனவும் , எனினும் அவர்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

பிவிதுரு ஹெல உருமய அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு சய்யப்பட முடியாத முறைமை இலங்கையிலும் ஆஸ்திரேலியாவிலும் மாத்திரமே காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

இது மக்களை ஏமாற்றும், அவர்களைத் தவறாக வழிநடத்தும் பொய்யான கருத்தாகும். இது பொய் என்பதை நிரூபிக்காவிட்டால் , தனியொரு நபரை பழிவாங்குவதற்காக நாம் 21 ஆம் திருத்தத்தை நிறைவேற்றியுள்ளோம் என்ற தவறான நிலைப்பாடு மக்கள் மத்தியில் தோற்றம் பெறும்.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மன் உள்ளிட்ட நாடுகள் இரட்டை குடியுரிமையுடையோருக்கு வாய்ப்பளிக்கின்றமை உண்மையாகும். தமது நாட்டிலுள்ள இரட்டை குடியுரிமையுடையோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டாலும், அவர்கள் நாட்டுக்கு துரோகமிழைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை அந்த நாடுகளில் காணப்படுகின்றமையே அதற்கான காரணமாகும்.

ஆனால், உலகில் பலவீனமான நாடாகக் காணப்படும் இலங்கையில் அந்த நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது என்பதை அனுபவத்தில் உணர்ந்திருக்கின்றோம். 2020 இல் அமெரிக்காவுடனான நியூ போட்ரஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போது நிதி அமைச்சராக இரட்டை குடியுரிமை கொண்ட பஸில் ராஜபக்ஷவே செயற்பட்டார். அமெரிக்காவின் மீது பற்று கொண்ட அவர் , அந்நாட்டுக்கு சாதகமாக நள்ளிரவில் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

எனவே தான் இரட்டை குடியுரிமையுடையோரை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்வதற்கான உரிமையை 21 ஆவது திருத்தத்தின் மூலம் நாம் இரத்து செய்தோம். நாட்டில் இரட்டை குடியுரிமை கொண்ட 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனவும், அவர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும் பலர் வலியுறுத்தியுள்ளனர். இது ஒரு கற்பனை மாத்திரமே.

கடந்த 2015 ஆம் ஆண்டு இரட்டை குடியுரிமையோரை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்வதற்கான உரிமை தடை செய்யப்பட்ட போது , நாட்டிலுள்ள தனவந்தர் ஒருவர் என்னுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலம் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் நோர்வே மற்றும் கனடா குடியுரிமையைக் கொண்ட 10 பேர் இருக்கின்றனர் எனவும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி அமைச்சுப்பதவி வகிக்கும் ஒருவர் சுவிட்ஸர்லாந்து குடியுரிமையைக் கொண்டிருப்பவர் எனவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றன.

இவர்களது தகவல்களை சேகரிப்பதற்குத் தேவையான செலவுகளைத் தான் பொறுப்பேற்பதாகவும், அந்த தகவல்களைச் சேகரித்து அவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் அவர் என்னிடம் தெரிவித்தார். அதற்கமைய மேற்படி நபர்களின் தகவல்களை சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது, எந்தவொரு நாடும் தமது பிரஜைகள் தொடர்பான தகவல்களை மூன்றாம் தரப்பினருக்கு வழங்குவதில்லை என்பதை அறிந்து கொண்டேன்.

எனவே குறித்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர் இரட்டைக் குடியுரிமை கொண்டவரா என்பதைக் கண்டறிவதற்கான வழிமுறையொன்று அரசாங்கத்திடமோ எம்மிடமோ இல்லை. எனவே இதற்காக வேறு வழிமுறையொன்றை இனங்காண வேண்டும். அத்தோடு இரட்டைக்குடியுரிமையுடையவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவார்களாயின், அவர்களது சொத்துக்களை அரசுடைமையாக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.



அத்தோடு தாம் இரட்டை குடியுரிமை அற்றவர்கள் என்று நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும் என்ற சட்டத்தை இயற்றி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் ஊடாக இரட்டை குடியுரிமையுடையோர் எமது நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவதைத் தவிர்க்க முடியும். அதனை விடுத்து இரட்டை குடியுரிமை யோரை பதவி விலகுமாறு கோருவதால், எவரும் பதவி விலகுவார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம். – என்றார்.

# நாட்டில் மக்களை வாழவைக்கும் ஒரு புதிய போராட்டமே அவசியம்!

## அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

கட்சி பேதம் இன்றி மக்களை வாழவைக்கும் போராட்டத்தையே அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அகிலவிராஜ் காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களைப் போலவே நாட்டின் எதிர்காலத்தையும் கஷ்டப்படுத்தும் போராட்டமாக இருந்தால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்நாட்டு மக்கள் புத்திசாலித்தனமாகவும் தீர்க்கமாகவும் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது என அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.



எரிவாயு வரிசைகள், மின்வெட்டு, பொருள்களின் விலையேற்றம் போன்ற பிரச்சினைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிகரமாகக் கையாண்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்காக யாழ். மாவட்ட செயலகத்தில் நடமாடும் சேவை!

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மாலை 4.30 மணி வரை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த நடமாடும் சேவையில் பிறப்பு மற்றும் திருமண சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் தொடர்பானவை, பிரஜாவுரிமை சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் தொடர்பானவை, இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களுக்கான காணித் தேவை மற்றும் காணி உரிமைப் பிரச்சினைகள் தொடர்பானவை, வன்முறையால் பாதிக்கப்பட்ட சொத்து மற்றும் உயிரிழப்பு காயத்துக்கான நட்டஈடு பெற்றுக் கொள்ளல் தொடர்பானவை, தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினூடாக ஏற்கனவே அனுப்பப்பட்ட கோவைகளை பூரணப்படுத்தல் தொடர்பான சேவைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் ஆகிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பங்குபற்ற உள்ளன. நடமாடும் சேவை தொடர்பாக தேவையான விடயங்களைத் தங்கள் பிரதேச செயலகங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளலாமென மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

# இலங்கையின் நிலைமை மேலும் மோசமடையுமாம்!

## உலக உணவுத் திட்டம் அறிவிப்பு

இலங்கையில் உக்கிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடி உணவுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக தொடர்ந்தும் இருப்பதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 2022 ஒக்ரோபர் முதல் 2023 பெப்ரவரி வரையான காலத்தில் தொடர்ச்சியான உதவி இல்லாமல் நிலைமை மேலும் மோசமடையக் கூடும் என்று உலக உணவுத்திட்டம் எச்சரித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, உணவுப் பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 93.7 சதவீதத்திலிருந்து செபரெம்பர் மாதத்தில் 94.9 சதவீதமாக உயர்ந்துள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில் மூன்று மாத காலத்துக்கு ஒரு மில்லியன் குழந்தைகளுக்கு பாடசாலை உணவை வழங்குவதற்காக, உலக உணவுத்திட்டம் ஆயிரத்து 475 மெற்றிக் தொன் அரிசி மற்றும் 775 மெற்றிக் தொன் இரும்புச் சத்துள்ள அரிசியை வழங்கியுள்ளது.

அவற்றின் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், அது அரசாங்கத்தின் தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு நேரடியாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பண்டோரா வெளிக்காட்டிய மோசடி பணத்தை நாட்டுக்கு கொண்டுவருக!

## சஜித் வலியுறுத்து



மோசடி தொடர்பாக பண்டோராவில் வெளியான தகவலின் அடிப்படையில் வெளிநாடுகளில் உள்ள டொலர்களை இலங்கைக்குக் கொண்டுவருமாறு சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவ்வாறு நாடு இழந்த பில்லியன் கணக்கான டொலர்களைக் கொண்டு வருவதன் மூலம் டொலர் தட்டுப்பாட்டை சரி செய்யலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இதன் மூலம் மருந்துப்பொருள்கள் தட்டுப்பாடும், டொலர் நெருக்கடியும் தீர்க்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு செய்யாமல் சீனா, இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் கடன் வாங்குவது பிரச்சினைக்குத் தீர்வாகாது என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச வளங்களும் அரச சொத்துக்களும் மீட்கப்பட வேண்டும் என்றாலும் தற்போதைய அரசாங்கம் அதற்காகச் செயற்படும் என்ற நம்பிக்கை இல்லை என எதிர்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# எதிர்வரும் நாள்கள் மிகவும் தீர்க்கமானவையாம் அரசியல், பொருளாதார மறுசீரமைப்பு அவசியம்!

## என்கிறார் தாரக பாலசூரிய



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பொருளாதாரம் மற்றும் அரசியலில் பல்வேறு அடிப்படை மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருந்த நாட்டையும் நாட்டு மக்களினதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் நாள்கள் மிகவும் தீர்கமானவை. அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமாயின் அவற்றில் அடிப்படை மாற்றங்களை செய்ய வேண்டும்.

அதனை மேற்கொள்வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புகள் அவசியமாகும். அவ்வாறு நாம் செயற்படவில்லை என்றால் மீண்டும் நெருக்கடிகளுக்குள் தள்ளப்படுவோம் என்று வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில் தற்போது அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புகள் தொடர்பில் தீர்மானங்களை முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன. எதிர்வரும் நாள்களில் அதன் பயன்களை நாம் கண்டுகொள்ள முடியும்.

எதிர்வரும் இரண்டு மாதங்களிகளுக்குள் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறு செய்யவில்லை என்றால் மீளவும் நாம் நெருக்கடிகளுக்குத் தள்ளப்படுவோம்.

குறிப்பாக வெளிநாட்டு அமைச்சு என்ற வகையில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கைப் பிரஜைகளுக்கு வெளிநாடுகளில் விசேட காரியாலயங்கள் அமைக்க எதிர்பார்த்துள்ளோம். மேலும் அவர்களுக்கு எதிராக இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் 3 முக்கிய திருத்த சட்டமூலங்களைக் கொண்டு வருவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

மேலும் நாட்டின் வரவு செலவுத் திட்டம் தொடர்ச்சியாகப் பற்றாக்குறையாகவே காணப்படுகிறது. பாதீடு இவ்வாறு காணப்படும் போது நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. பொருளாதார மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் அதே போன்று அரசமைப்பிலும் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். மேலும் தற்போது நிறைவேற்றப்பட்ட 22 அரசமைப்பு திருத்தம் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

மேலும் இதன் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் இராஜாங்க அமைச்சர் பதிலளித்திருந்தார்.

கேள்வி: நாட்டின் தற்போதைய போசனை மட்டம் மற்றும் உணவு தட்டுப்பாடு தொடர்பில் உங்களுடைய கருத்து என்ன?

பதில்: இலங்கையில் சாதாரண மனிதர் ஒருவர் பெற்றுக் கொள்ள வேண்டிய கலோரி பெறுமானத்தின் அளவு 2050 ஆகும். ஆனால் தற்போது புரோட்டீன் பெறுமானமே குறைந்துள்ளது. நாட்டின் உணவுப் பணவீக்கம் அதிகரித்தமையே அதற்குக் காரணமாகும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கேள்வி: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது சிதறிப்போயுள்ளதாகப் பலரும் கூறுகிறார்கள் அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

பதில்: இல்லை. பலரும் தங்களுடைய கருத்துகளை கூறுவார்கள் அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர். ஆரம்பத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது கொண்ட நம்பிக்கையிலேயே அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தன. இன்றும் அவ்வாறு செயற்படுகின்றன. கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு விலகி சென்றாலும் அதே நிலைப்பாட்டிலேயே அனைவரும் உள்ளனர். அரசியல் கட்சிகளை ஒதுக்கி அரசியல் பயணத்தைத் தொடர முடியாது. ஒற்றுமையாகப் பயணிப்பதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். – என்றார்.

# மற்றொரு அரிசி தொகுதியும் சீனாவில் இருந்து நாட்டுக்கு!

கொழும்பு, ஓக். 28

சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட மற்றொரு அரிசி தொகுதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நவியோஸ் ஜாஸ்மின் கொள்கலன் கப்ப லில் 500 மெற்றிக் தொன் அரிசி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த அரிசியின் வருகையை அடுத்து, சீனா இலங்கைக்கு வழங்கிய மொத்த உதவித்தொகை 6 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளதாகத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# மட்டக்களப்பு கரடியனாற்றில் கைக்குண்டு, கண்ணிவெடி மீட்பு!

மட்டக்களப்பு, ஓக். 28

மட்டக்களப்பு – கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரளக்குளம் காட்டுபகுதியில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு மற்றும் கண்ணிவெடியை புதன்கிழமை இராணுவத்தினர் மீட்டு ஒப்படைத்துள்ளனர் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

விமானப்படை புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான புதன் மாலை இராணுவத்தினருடன் விமானப்படை புலனாய்வு பிரிவினர் இணைந்து ஈரளக்குளம் காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றும் கண்ணிவெடி ஒன்றையும் மீட்டு கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை இந்த பகுதி கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை பாதுகாக்க நடவடிக்கைகள்!

கொழும்பு, ஓக். 28

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை பாதுகாப்பதற்காக மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எதிர்காலத்தில் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறுவது தொடர்பாகக் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும்போதே, அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறுவதற்கு பேச்சு நடத்தி வருவதாகவும் அதை நிறுத்தாமல் பராமரிக்கும் வகையில், பல மனித உரிமைகள் அம்சங்களில் முன்னேற்றம் அடையத் தேவையான பணிகளை இலங்கை அரசு செய்து வருகிறதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மேலதிக வரிச் சட்டமூலம் தொடர்பான ரகசிய முடிவை சபாநாயகருக்கு அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவு

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேலதிக வரிச் சட்டமூலம் தொடர்பான ரகசிய முடிவை சபாநாயகருக்கு அனுப்ப உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, எஸ். துரைராஜா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித் துள்ளது.

சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்கள் மீதான விசாரணை நிறைவடைந்ததை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தடுத்துவைக்கப்பட்டுள்ள பௌத்த மதகுருவின் உயிருக்கு ஆபத்தாம்!

## அனைத்து பல்கலைகழக மாணவர் சம்மேளனம்



அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் கல்வேவ ஸ்ரீதம்ம தேரரைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன எனக் குற்றம்சாட்டியுள்ள அனைத்து பல்கலைகழக மாணவர் சம்மேளனம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள – ஒருவார காலத்துக்கு மேல் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள – பௌத்த மதகுருவிற்கு உரிய வசதிகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

ஸ்ரீதம்மதேரர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார், 22 ஆம் திகதி அவரைப் பார்ப்பதற்காக அவரின் சகோதரி பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு சென்றார். ஆனால் அவரால் தனது சகோதரருடன் சரியான விதத்தில் பேச முடியவில்லை என அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டெரன்ஸ் ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பௌத்தமதகுருவிற்கு பரசிட்டமோலை கூட வழங்கவில்லை, போதியளவு உணவைக் கூட வழங்கவில்லை, இந்தத் தகவல்கள் வெளியில் தெரியவந்த பின்னரே பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இந்த விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தத் தொடங்கினர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த மதகுரு ஒருவாரகாலத்துக்கு மேல் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள போதிலும் 25 ஆம் திகதியே அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார், அதுவரை அவரை மருத்துவபரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கையைக் கூட அதிகாரிகள் எடுக்கவில்லை என அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டெரன்ஸ் ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த எவரையும் கல்வேவ ஸ்ரீதம்ம தேரரை சந்திப்பதற்கு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. ஏனைய செயற்பாட்டாளர்களுக்கும் அனுமதி வழங்கவில்லை, குறிப்பிட்ட தரப்பினருக்கும் அவர்கள் உரிய தகவல்களை வழங்கவில்லை, அவரது சகோதரி அவரைப் பார்ப்பதற்கு சென்றிருக்காவிட்டால் உண்மை நிலை தெரியவந்திருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினதும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சனரினதும் நோக்கம் கொலை முயற்சியே என சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவிக்க முடியும். மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எப்படி ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பது வரலாறு மூலம் எங்களால் இதனைப் புரிந்துகொள்ள முடியும் என அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டெரன்ஸ் ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

மஹிந்தராஜபக்ஷகாலத்திலும்மாணவ செயற்பாட்டாளர்கள் கொல்லப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இயல், இசை, நடன, நாடக பாடங்களுக்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்!

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையத்தில் இயல், இசை, நடன, நாடக பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கம், வயலின், நாடகமும் அரங்கியலும் மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய பாடநெறிகள் கற்பிக்கப்பட வுள்ளன.

இதற்காக உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குறித்த பாடங்களைக் கற்பிக்கக்கூடிய தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விவரங்களை எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் "நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் உடுவில், கற்பொக்கனை பிள்ளையார் கோவிலடி" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.10.2022இல் வெளியிடப்பெற்றது.